பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை-4

23 09 2022 **FRIDAY** **7.15 PM**

*தலைப்புச் செய்திகள்*

1. சுற்றுச்சூழல் அனுமதிவழங்குவதில் மாநிலஅரசுகள் வெளிப்படைத்தன்மையைகடைபிடிக்கவேண்டும் என்றுபிரதமர் திரு. நரேந்திரமோடிகேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழகத்தின் வளர்ச்சிக்குதேவையானநிதியைமத்தியஅரசுவழங்கிவருவதாகபிஜேபிதலைவர் திரு. ஜெ.பி. நட்டாகூறியுள்ளார்.

3. இணையதளகுற்றங்களில் இருந்துபயனாளர்களைபாதுகாக்கும் வகையிலானஅம்சங்கள் புதியதொலைத்தொடர்பு மசோதாவில் இடம்பெற்றுள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.

4. நாட்டின் ஒட்டுமொத்தஉள்நாட்டுஉற்பத்தியில் சிறு-குறு தொழில்துறை 30 சதவீத பங்கினைவகிப்பதாகஅத்துறைக்கானமத்திய இணையமைச்சர் திரு. பானுபிரதாப்சிங் வர்மாகூறியுள்ளார்.

5. இந்தியா– ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவதுடுவென்டி–டுவென்டிகிரிக்கெட் போட்டிதொடங்குவதுமழைகாரணமாகதாமதமாகியுள்ளது.

--- *இனிவிரிவானசெய்திகள்*---

<<<<<<>>>>>>>

சுற்றுச்சூழல் அனுமதிவழங்குவதில் மாநிலஅரசுகள் வெளிப்படைத்தன்மையைகடைபிடிக்கவேண்டும் என்றுபிரதமர் திரு. நரேந்திரமோடிகேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத்தில், மாநிலசுற்றுச்சூழல் துறைஅமைச்சர்கள் பங்கேற்றுள்ளதேசியமாநாட்டினை, காணொலிவாயிலாக இன்றுதொடங்கிவைத்துஅவர் உரையாற்றினார்.

மத்தியஅரசுமேற்கொண்டநடவடிக்கைகள் காரணமாக, நாட்டின் வனப்பரப்பும், ஈர நிலங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதாகஅவர் கூறினார்.

சுற்றுச்சூழலைபாதுகாப்பதற்கானதிட்டங்களைசெயல்படுத்துவதில், மாநிலஅரசுகளுக்கு இடையேஆரோக்கியமானபோட்டிநிலவவேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>>

பீகார் மாநிலத்தில் மக்களுக்குசேவையாற்றும் வகையிலும், வளர்ச்சிக்காகவும் பிஜேபிசெயல்பட்டுவருவதாகமத்தியஉள்துறைஅமைச்சர் திருஅமித் ஷா கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் பயணம் மேற்கொண்டுவரும் அவர், இன்று**Purnea**-வில் நடைபெற்றபொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். சிலஎதிர்க்கட்சிகள் சுயநலத்துடன் செயல்பட்டுவருவதாகஅவர் குற்றம் சாட்டினார். வளர்ச்சியைவிரும்பும் பீகார் மாநிலமக்கள் பிஜேபி-க்குவாக்களிக்கதயாராகிவிட்டதாகவும் திருஅமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் வளர்ச்சிக்குதேவையானநிதியைமத்தியஅரசுவழங்கிவருவதாகபிஜேபிதலைவர் திரு. ஜெபி. நட்டாகூறியுள்ளார்.

காரைக்குடியில் இன்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தின் வளர்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திரமோடிதனிக்கவனம் செலுத்திவருவதாகதெரிவித்தார்.

கூட்டாட்சிதத்துவத்திற்குஎதிராகதிமுகஅரசுசெயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் பிஜேபிக்கானமக்கள் ஆதரவு தொடர்ந்துஅதிகரித்துவருவதாகவும் திரு. நட்டாதெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

இணையதளகுற்றங்களில் இருந்துபயனாளர்களைபாதுகாக்கும் வகையிலானஅம்சங்கள் புதியதொலைத்தொடர்பு மசோதாவில் இடம்பெற்றுள்ளதாகமத்தியதகவல் தொடர்புத்துறைஅமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதியதொலைத்தொடர்பு வரைவு மசோதாகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் விளக்கினார்.

விரிவானஆலோசனைக்குப்பிறகே புதியஅம்சங்கள் மசோதாவில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளதாகஅவர் கூறினார்.

எளியமுறையில் தயாரிக்கப்பட்டுள்ள இம்மசோதாவில் தேவையற்றவிதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பயனாளர்களுக்குதேவையற்றஅழைப்புகள் வருவதைதடுக்கும் வகையிலும், அழைப்பவர்களின் விவரங்களைகாணும் வகையிலானஅம்சங்கள் புதியதொலைத்தொடர்பு மசோதாவில் இடம்பெற்றுள்ளதாகஅவர் கூறினார். மொத்தம் 117 கோடிபேர் தொலைத்தொடர்பு வசதியைபெற்றுள்ளதாகவும், இத்துறை மூலம், 40 லட்சம் பேருக்குவேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்தஉள்நாட்டுஉற்பத்தியில் சிறு-குறு தொழில்துறை 30 சதவீத பங்கினைவகிப்பதாகஅத்துறைக்கானமத்திய இணையமைச்சர் திரு. பானுபிரதாப்சிங் வர்மாதெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தஞ்சாவூரில் இன்றுநிகழ்ச்சிஒன்றில் பேசியஅவர், இந்ததுறையின் மூலம் 11 கோடிக்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பினைபெற்றுவருவதாககூறினார். சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கான இலக்கினைஎட்டுவதில், சிறு குறு தொழில்துறைமுக்கியப் பங்குவகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்ததொழில் நிறுவனங்களுக்குசர்வதேசஅளவில் சந்தைவாய்ப்பைஏற்படுத்திதருவதற்காகமத்தியஅரசுபல்வேறுதிட்டங்களைசெயல்படுத்திவருவதாகவும் திரு. பானுபிரதாப்சிங் வர்மாகூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

நாடுமுழுவதும் 4 லட்சத்து 37 ஆயிரம் அங்கன்வாடிமையங்களில் ஊட்டசத்துபூங்காக்கள்அமைக்கப்பட்டுள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.

இதுகுறித்துமகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுஅமைச்சகம் வெளியிட்டுள்ளஅறிக்கையில், பழங்கள், காய்கறிகள், மருத்துவகுணம் கொண்டதாவரங்கள் அல்லது மூலிகைகள் ஆகியவற்றைஎளிதில் வழங்கும் வகையில், இத்தகையஊட்டச்சத்து பூங்காக்கள் அமைக்கப்பட்டுவருவதாககூறியுள்ளது.

<<<<<<>>>>>>>

இந்தியாவிலிருந்துகனடாசெல்பவர்கள் மற்றும் கல்விகற்கசெல்லும் மாணவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறுவெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

கனடாவில் அதிகரித்துவரும் குற்றங்கள், வன்முறைமற்றும் இந்தியர்கள் மீதானதாக்குதல் ஆகியவற்றையடுத்து, அமைச்சகம் இவ்வாறுகூறியுள்ளது.

இந்தியர்கள் மீதானதாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீதுநடவடிக்கைஎடுக்குமாறு அங்குள்ள இந்திய தூதரகம் கனடாஅரசிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கனடாசெல்பவர்கள் ஒட்டாவா, டொரோன்டோ, வான்கூவர் ஆகியநகரங்களில் உள்ள இந்திய தூதரகங்களில் ஏதேனும் ஒன்றில் இணையதளம் வாயிலாக தங்களதுவிவரங்களைபதிவு செய்துகொள்ளுமாறுகேட்டுக்கொண்டுள்ளது.

இதனால், பதிவு செய்துள்ள இந்தியர்களுக்குஏதேனும் அசாதாரணசம்பவம் ஏற்பட்டால், அவர்களைஎளிதில் தொடர்புகொள்ள இந்தபதிவு உதவும் என்றுவெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

அகில இந்தியவானொலி 75 ஆண்டுகாலபயணத்தில் மக்களுக்குஅளித்துவரும் சேவையில் ‘எளிமையாகவர்த்தகம் செய்தல் ’பற்றியதொகுப்பின் தொடர்ச்சி இன்று இடம்பெறுகிறது.

அகில இந்தியவானொலியின் இந்த“சிறப்பு தொகுப்பினை”எமதுசமூகவலைதளங்களிலும் காணலாம்.

<<<<<<>>>>>>>

சென்னைசென்ட்ரல் - பித்ராகுண்டா இடையே இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரயில் சேவை இருமார்க்கங்களிலும் இம்மாதம் 26, 28 மற்றும் 29-ஆம் தேதிகளில் ரத்துசெய்யப்படுவதாகதெற்குரயில்வேஅறிவித்துள்ளது.

சூளூர்பேட்டை—தடா இடையேரயில்பாதைகளில் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப்பணிகள் காரணமாக இந்தசேவைரத்துசெய்யப்படுவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபுரா — மங்களூரு இடையேதினசரி இயக்கப்படும் சிறப்பு ரயில் சேவைமேலும் நீட்டிக்கப்படுவதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்தமாதம் முதல் தேதியிலிருந்து, அடுத்தவருடம் ஜனவரி 31-ஆம் தேதிவரை இந்தரயில் இயக்கப்படும் என்றுதெற்குரயில்வேவெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

புதுதில்லிஎய்ம்ஸ் மருத்துவமனை இயக்குனராகடாக்டர் எம். சீனிவாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய இயக்குனர் திருரன்தீப் குலேரியாவுக்குபதில், புதிய இயக்குனராகபதவியேற்கவுள்ளடாக்டர் சீனிவாஸ், தற்போதுஹைதராபாத் இஎஸ்ஐசிமருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைதலைவராகஉள்ளார்.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்தி*

இந்தியா– ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவதுடுவெண்டி–டுவெண்டிகிரிக்கெட் போட்டி இன்றுநாக்பூரில் நடைபெறுகிறது.

மழைகாரணமாகஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**<<<<<<THE END>>>>>>>**